செ.வெ.எண்: 372

# பத்திரிக்கைச் செய்தி

20.06.2007

பொது மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்தும் நோக்குடன் 14.4.2007 முதல் குறைந்த விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா ஆகிய பொருட்களை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், பருப்பு வகைகள், பாமாயில் போன்றவைகளின் வெளிச்சந்தை விலை குறைந்துள்ளது. தற்பொழுது நிலவும், வெளிச்சந்தை விற்பனை விலைக்கும், நியாய விலைக் கடை விற்பனை விலைக்கும் சிறிதளவே வித்தியாசம் உள்ளது. எனவே, நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனைச் செய்யப்படும் துவரம்பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவைகளின் விலையை ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் தற்போதைய விற்பனை விலையான முறையே ரூ34/- மற்றும் ரூ.40/–க்கு பதிலாக, துவரம் பருப்பு கிலோ ரூ.32/– ஆகவும் உளுத்தம் பருப்பு கிலோ ரூ.36/- ஆகவும் 21.6.2007 முதல் குறைத்து விற்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது.

Issued By: DIPR, Chennai.

கு.மச்சேந்திரநாதன்,
அரசுச் செயலாளர்

P.R. No: 372

**PRESS RELEASE** 20.06.2007

As a measure to contain the rise in prices of essential commodities such as toor dhall, urad dhall, palm oil, rava and maida, the Government introduced a scheme of selling these commodities in the fair price shops under public distribution system at a reduced price with effect from 14.4.2007. After introduction of the scheme, the open market prices of dhall and palm oil have come down. At present the difference between the price of dhall in the open market and the price of dhall sold in the fair price shops is low. The Government have reduced the prices of toor dhall and urad dhall now sold in the fair price shops from Rs.34/- and Rs.40/- per kg to Rs.32/- and Rs.36/- respectively from 21.6.2007 in order to benefit the poorer sections of the public.

Issued by
DIPR
Chennai

S.MACHENDRANATHAN,
SECRETARY TO GOVERNMENT